# புனித வெள்ளி சிலுவைப்பாதை

**முன்னுரை:**
இயேசுவில் பிரியமானவர்களே, நாம் நினைவுகூர்கின்ற இந்த சிலுவைப்பாதை என்றோ எங்கோ நடந்து முடிந்த வரலாற்று நிகழ்வல்ல.மானிட வரலாற்றை புரட்டிய, சமூகமாற்றத்திற்கு வித்திட்ட ஒரு போராட்ட பாதை. கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் அன்றாடம் நடக்கின்ற வாழ்வின்பாதை. தடம்பார்த்து நடந்த மனிதனின் பாதையல்ல இந்த சிலுவைப்பாதை மாறாக, நாம் தடம் பார்த்து நடக்க தடம்பதித்து சென்ற புனிதனின் பாதை. தான் வாழவேண்டும், தன்னுடைய விருப்பமே நிறைவேற வேண்டுமென்று வாழுகின்ற மனிதர்கள் மத்தியில் தன்விருப்பமல்ல, தன் தந்தையின் விருப்பமே நிறைவேற வேண்டுமென்று, காயப்பட்டவராய், எதார்த்தங்களை துணிவோடு ஏற்று தன்னையே பலியாக்கிய துடிப்புமிக்க 33வயது இளைஞனின் இலட்சியப்பாதை.

இன்று இச்சிலுவைப்பாதையில் இயேசுவின் பாடுகளில் அவரோடு உடன்நடந்தவர்கள், அவருக்கு உடனிருந்து உதவியவர்கள், அவர் நிலைகண்டு கலங்கியவர்கள் என்று அனேகர் கல்வாரிப்பாதையின் பிம்பங்களாக நம்முன் காட்சிதருகிறார்கள். அந்த பிம்பங்களின் வழியாக இயேசுவின் பாடுகளைத் தியானிப்போம். பார்வையாளராய் பங்கேற்க ஏராளமானோர் இருக்கிறார்கள், பங்கேற்பாளராய் பங்கேற்க பலர் இருக்கிறார்கள் ஆனால் பயணிப்பவர்களாய் உடன்நடக்கயாருமில்லை. உடன் பயணிக்க நாம் தயாரென்றால் நம்மையே இக்கல்வாரிப்பயணத்தில் இணைத்துக் கொள்வோம் வாருங்கள்.

## முதல்நிலை: இயேசுவைத் தீர்ப்பிடுகிறார்கள்

**பிலாத்து பேசுகிறான்:**
நான் போந்தியு பிலாத்து பேசுகிறேன். ஆம், இயேசுவைக் கொன்றவன் என்று இந்த உலகமே பழிதூற்றும் அந்த போந்தியு பிலாத்து தான் பேசுகிறேன். நான் பதவி ஆசையின் காரணமாக இயேசுவின் கொலைக்கு உடந்தையாக இருந்தவன் என்பதை ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால், குற்றமற்றவர் இயேசு என்பதை அறிந்து, நான் அவரை விடுவிக்க வழிகளைத் தேடிய போது நீதிமாளிகையின் அத்தனை கதவுகளையும் அடைத்தது யார்?. அவனை சிலுவையில் அறையுமென்று ஒலித்தது உங்கள் குரலொலிகள்

தானே! சரி அது இருக்கட்டும். இயேசுவால் குணமடைந்த ஆண்கள், பெண்கள், தொழுநோயாளிகள், ஏன் மிகவும் நேசித்த சீடர்கள் என்று யாராவது ஒருவர் சாட்சி சொல்ல வந்திருக்கலாமே. அத்தனை பேரும் உயிருக்கு பயந்து ஓடி ஒளிந்தார்களே அந்த செய்நன்றி மறந்த மனிதர்கள்.

இயேசு பேசுகிறார்:

நீங்களும் பிலாத்தைப் போல கைகளில் அழுக்கை வைத்துக்கொண்டு கண்ணாடிகளைச் சுத்தப்படுத்தும் வேலையைத் தான் இன்னும் செய்துகொண்டிருக்கிறீர்களா?. உங்கள் மனசாட்சிகளில் படிந்திருக்கும் அநியாய ஒட்டடைகளை அகற்றுங்கள். நல்லவர்களுக்கு அநியாயத் தீர்ப்புகள் சொல்லி, விமர்சனங்களால் கொன்ற காலம் பிலாத்துவோடு போகட்டும். உங்கள் விமர்சனங்கள் அடுத்தவர்களை வளர்த்தெடுக்கவும், உங்கள் தீர்ப்புகள் உடனிருப்பவரை நெறிப்படுத்தவும் மட்டும் உதவட்டும்.

நாம் பேசுவோம்:

அன்பான இயேசுவே! எங்களுடைய சுயநலன்களுக்காக அடுத்தவர்களை வதைக்கின்ற மனநிலையை எங்களிடம்ருந்து நீக்கியருளும். உம்மைப் போன்று உறவை வளர்க்கும் நலமான வார்த்தைகளை பேச நல்ல இதயத்தை தந்தருளும்.

## இரண்டாம் நிலை: இயேசுவின் மீது சிலுவை சுமத்தப்படுகிறது

**சிலுவை பேசுகிறது:**

நான் தான் இயேசுவின் தோள்களைத் தழுவியதாலேயே எல்லாருடைய இதயங்களிலும் இடம்பிடித்த பாரமான சிலுவை பேசுகிறேன்!. இறைவன் எங்களை கனி தரும் மரங்களாகத் தான் படைத்தார் ஆனால், இதயமற்ற மனிதர்கள்தான், எங்களை மரணக்கருவிகளாக உருமாற்றினார்கள்!. கருவறையில் சேயைச் சுமக்கும் தாயைப்போல, கல்விகற்க புத்தகத்தை சுமந்து செல்லும் மாணவர்களைப் போல என்னை விரும்பி ஏற்று கல்வாரிநோக்கி சுமந்து செல்கிறார் இறைமகன் இயேசு.

இயேசு பேசுகிறார்:

உங்கள் பாவங்களுக்காக, நீங்கள் விடுதலை பெறுவதற்காக பாரமான சிலுவையை நான் சுமக்கிறேன் ஆனால், நீங்களோ உங்கள் அன்றாடச் சிலுவைகளை சுமக்க விரும்புவதில்லையே ஏன்?. நீங்கள் சுமக்கின்ற சிலுவைகள் உங்கள் தோள்களைத் தழுவியது எதனால்?. ஆடம்பர ஆசையால் வந்தது கடன்சிலுவை. முயற்சியும், உழைப்பும் இல்லாததால் வந்தது வறுமைச் சிலுவை. உறவுகள் பதுங்கியதால்

வந்தது முதுமைச் சிலுவை. வாழ்வதற்காக உண்ணாமால், உண்பதற்காகவே வாழ்ந்ததால் வந்தது உடல் சிலுவை. இப்படி நீங்களே வருவித்துக் கொண்ட சுமைகளைச் சுமக்க வருந்துவது ஏன்?. வாருங்கள் நான் உங்களோடு பயணிக்கிறேன்.

நாம் பேசுவோம்:

எங்கள் சுமைகளைத் தாங்கி சுமந்த இயேசுவே! நாங்களாக தேடி வருவித்துக் கொண்ட சிலுவைகளை மனமுவந்து சுமந்து செல்ல உமதருளைத் தந்தருளும் இறைவா.

## மூன்றாம் நிலை: இயேசு முதல் முறையாக கீழே விழுகிறார்

**நிலம் பேசுகிறது:**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்று சொல்வார்களே அந்த நிலம்தான் பேசுகிறேன். அகிலத்தை படைத்த இறைவனையே அரவணைத்துக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு. தாங்கி நிற்பதற்காக படைக்கபட்ட என்மேல் தடுக்கி விழுகிறார் இயேசு. எது அவரை  முகம் குப்புற விழுத்தாட்டியது?. தோள்களை அழுத்தி கீழே தள்ளிய சிலுவையின் பாரமா? இல்லை, பரிதவிக்கவிட்டு பறந்து போன சீடர்களின் துரோகமா?. நடக்க பழகிய பருவத்தில் தடுக்கிவிழாமல் நடை பழகியவர்கள் யாருமில்லை. ஆனால், பழக பழக நடையைக்கூட்டி விழுவதைக் குறைப்பதில் தானே அர்த்தமும், வாழ்வின் அனுபவமும் பிறக்கிறது அதைத் தான் இயேசுவின் வாழ்வில் நான் கண்டேன்.

இயேசு பேசுகிறார்:

இன்று உங்களில் எத்தனை பேர் உயிரையும், உறவையும் சிதைக்கும் போதையில் விழுந்துகிடக்கிறீர்கள்?. நம்பிக்கையையும், பாசத்தையும் தகர்க்கும் சந்தேகத்தில் விழுந்துகிடக்கிறீர்கள்?. மதிப்பையும் மரியாதையையும் குலைக்கும் தாழ்வு மனநிலையில் விழுந்துகிடக்கிறீர்கள்?. வீழ்வது தவறல்ல ஆனால் நிலத்தில் வீழ்ந்துகிடப்பதில் சுகம் காண்பதுதான் தவறு. மழையென விழுந்த நீர் மேகமாய் எழுவது போல் உங்கள் வீழ்ச்சிகளில் எழுச்சிகாணுங்கள.; மண்ணில் விழுந்த போதும் மீண்டெழுந்த என் எழுச்சி உங்களுக்கு கைகொடுக்கும் என்பதை மறவாது எழுந்து புறப்படுங்கள்.

நாம் பேசுவோம்:

வீழ்ந்தபோதும் மீண்டெழுந்த இயேசுவே! எங்கள் அன்றாட வாழ்க்கையில், எங்கள் வார்த்தைகளாலும், செயல்களாலும் வீழ்ந்து போனதை எண்ணி நாங்கள் மனம்வருந்துகிறோம். வீழ்ச்சி கண்டு துவண்டுவிடாது உமது எழுச்சிகண்டு நாங்களும் துணிந்து பயணிக்க உமது வல்லமையைத் தந்தருளும்.

## நான்காம் நிலை: இயேசு தனது அன்னையை சந்திக்கிறார்

**மௌனம் பேசுகிறது:**

என்னை எல்லாரும் வாய் பேச முடியாதவர்களின் தாய்மொழி என்கிறார்கள். அமைதி, நிசப்தம், மௌனம் என பல்வேறு வார்த்தைகளால் அழைக்கின்றார்கள் என்னை. ஆனால், இன்று ஒரு தாய்க்கும் மகனுக்கும் இடையில் உலவுகின்றேன். பத்துமாதம் வயிற்றினில் சுமந்து பெற்றெடுத்த மகன் இன்று சிலுவையினை சுமந்துகொண்டு செல்லுவதைக் காணும்போது தாய் மரியாவுக்கு மௌனமாகிய நானே துணையாக நிற்கின்றேன். கல்வாரி நோக்கிசெல்லும் மகனுக்கு கண்ணீரால் பிரியா விடைகொடுத்து மௌனமாய் நிற்கின்றார் வீரத்தாய் அன்னை மரியாள்.

இன்றும் எத்தனையோ தாய்மார்கள் என்னைத்தான் பல்வேறு சூழ்நிலைகளில் தங்களின் துணையாகக் கொண்டுள்ளார்கள். குடித்துவிட்டு தீய வார்த்தைகளால் கணவன் திட்டுகின்றபோதும், ஆண் சொல்வதை பெண் கேட்கவேண்டும் என்று ஆணவத்தோடு ஆண்கள் பேசும்போதும், திருமணமான இடத்தில் என்ன பிரச்சனை வந்தாலும் அமைதியாக இரு என்று பிறந்த வீட்டுச் சொந்தங்கள் பெண்களுக்கு அறிவுரை கூறும்போதும் நான் தான் அவர்களுக்கு ஆறுதலாய், துணையாய்; அவர்களின் தாய்மொழியாய் உள்ளேன்.

இயேசு பேசுகிறார்:

சிறுவயதில் எனக்கு பேசக் கற்றுதந்த என் அன்னை மரியாவின் உதடுகள் ஏன் இன்று மௌனமாய் அமைதியாய் இருக்கின்றன?. இன்று என் தாய் மரியா எனக்கு இந்த உலகில் இன்னொரு மொழியாகிய மௌனத்தை இந்த கல்வாரிப் பாதையில் கற்றுத் தருகின்றார். இத்தனை கூச்சலுக்கு நடுவில் என் தாயின் அமைதிமொழி என்னை புதுத்தெம்புடன் நடக்கச்செய்கிறது.

நாம் பேசுவோம்:

அன்பான இயேசுவே! இன்று எம் நடுவே இந்த மௌனமொழி பேசி வெளியே சொல்லமுடியா துயரோடு வாழுகின்ற அனைத்து தாய்மார்களின் வேண்டுதலையும்

உம் பாதம் வைக்கின்றோம் நீரே அவர்களுக்கு ஆறுதலாய் இருந்து புதுத்தெம்பினை தந்தருளும்.

## ஐந்தாம் நிலை: இயேசுவுக்கு சீமோன் உதவி செய்கிறார்

**சீமோன் பேசுகிறார்:**

வானத்து மழையை நம்பி விவசாயம் செய்து, வாரிசுகளை வளர்த்தெடுப்பதற்காக, வயல்வெளிகளில் அறுவடைசெய்து வாழும் சீரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் பேசுகிறேன். அன்றொரு நாள் வயலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்புகையில் வீதியில் கண்டேன் இயேசுவை. உடலைங்கும் இரத்தம் சொட்ட காலிரண்டும் நிலைதடுமாற, தள்ளாடி தளர்நடை போட்டு, சிலுவை சுமந்து சென்றது ஒரு செம்மறி. கூட்டத்தில் ஆயிரம்பேர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தபோது தோளோடு தோள்கொடுத்து இயேசுவின் பாரம் சுமக்க அழைப்பு வந்தது ஏனோ என்னிடம். அன்று இயேசுவின் சிலுவையை சில நூறு அடிகள் மட்டுமே சுமந்த என்னை இன்று வரலாறு வாழ்த்துகிறது. வானுலகம் போற்றுகிறது. சக மனிதனுக்கு ஒரு தேவையென்றால் மடைதிறந்த வெள்ளம் போல் தேடிச்சென்று உதவுவதுதானே மனிதம் அதைத்தான் நான் செய்தேன்.

இயேசு பேசுகிறார்:

பிறர் துயரத்தில் உங்களது மனநிலை என்ன?. அண்டைவீட்டில் தீப்பிடிக்கும் வேளையில் அணைக்கட்டும், சென்று ஆறுதல் சொல்வோம் என்று அமைதிகாக்கும் கூட்டமா நீங்கள்? அல்;லது துயரம் வந்தால் தூரப்போகும் உறவுகளாக இல்லாமல் நெருங்கிவந்து உதவிடும் சீமோனா?. வாழ்வது ஒரு முறை சீமோனைப் போன்று வாழ்ந்தால் இந்த தலைமுறையும் உங்களை வாழ்த்தும்.

நாம் பேசுவோம்:

துயர் துடைக்கும் உன்னதரே எம் இறைவா! பாரமான இதயத்தோடு வருபவர்களுக்கு, பரிவாய் செவிசாய்த்து சீமோன் போன்று உதவிக்கரம் நீட்டி துணைநிற்கும் உயர்ந்த உள்ளத்தை எங்களுக்குள்ளே படைத்தருளும்.

## ஆறாம் நிலை: இயேசுவின் முகத்தை வெரோணிக்காள் துடைக்கிறார்

**வெரோணிக்காள் பேசுகிறார்:**

நான் வெரோணிக்காள் பேசுகிறேன். அன்று வரை இயேசுவை நான் பார்த்தது கூட கிடையாது. அவர் குருடர்களைத் தொட்டு பார்வை கொடுப்பவர், முடவர்களை

நடக்கச் செய்பவர், நோயுற்றோரைத் தொட்டு குணப்படுத்துபவர், பாவிகளை மீட்க அவர்களோடு உறவாடுபவர் என்று அவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். இயேசுவை காண வேண்டும் என்ற பேரன்பும், பேராவலும் கொண்டிருந்த பேதை நான். ஆனால், வெறிப்பிடித்த வேட்டை நாய்களின் கோரப்பற்களால், குதறப்பட்ட ஆட்டுக்குட்டியைப் போல் இரத்த வெள்ளத்தில் அவரைக் காண்பேன் என்று கனவில் கூட நான் நினைத்ததில்லை. இரத்தமும், வியர்வையும் இமை நனைத்து, இயேசுவின் முகம் அலங்கோலமாயிருந்த நிலையில் உருகுலைந்த அவர் முகத்தை, அவரைப் போன்று மாசில்லா வெள்ளைத் துணி கொண்டு துடைத்தேன்.

இயேசு பேசுகிறார்:

பிறர் முகத்தில் கரிபூசி, பிறர் வாழ்வில் குறை காண எப்பொழுதும் வாயில் குறையோடு அலைகின்ற மனிதர்கள் மத்தியில், பொலிவிழந்த என் முகத்தை துடைத்த வெரோணிக்காவாக வாழுங்கள். பிறர் வாழ்வை சீரழிப்பதையும், சீர்குலைப்பதையும் விட, சீர்தூக்கி பார்த்து, சீர்படுத்தி பெருமைப்படும் மனிதம் காக்கும் மாந்தர்களாக வாழுங்கள். கறை துடைத்து கறையில்லா சமூகத்தை இம்மண்ணில் மலரச்செய்ய வெரோணிக்காவை பின்தொடருங்கள்.

நாம் பேசுவோம்:

எங்களுக்காக இன்னுயிர் தந்த இயேசுவே! எங்கள் கோழைத்தனத்தை விலக்கி, வெரோணிக்காவைப் போன்று துயர்துடைக்கும் வீரமிக்க மாந்தர்களாக, எங்களால் இயன்றதைச் செய்து, மனிதநேயத்தை நிறைவாக்க உம் அருள்தாரும்.

## ஏழாம் நிலை: இயேசு இரண்டாம் முறையாக கீழே விழுகிறார்

**சாட்டைகள் பேசுகின்றன:**

பாவம் அறியாத புண்ணிய உடலை கசையடிகளால் கண்ணிப்போகச் செய்துஇ இயேசுவை இரண்டாம் முறை நிலைதடுமாறி முகம்குப்புற விழுந்தாட்டிய சாட்டைகள் பேசுகிறேன். வாழ்ந்த காலமெல்லாம் நன்மையன்றி தீமைஅறியாத, மனிதருள் மாணிக்கத்தை, சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் தீங்கு நினையாத புண்ணியனைஇ நரம்புகள் எல்லாம் நடுங்க, தோல் கிழிந்து இரத்தம் பெருக, எலும்புகள் நொறுங்கி நிலைதடுமாறிஇ விழுந்தாட்டிய கொடுமையைச் செய்தவன் நான்.

கசையடி சப்தங்களே என் ஆற்றமையின் ஓலங்களாகிப் போயின. வீசிய பக்கமெல்லாம் விரைந்து விளைவுகளை ஏற்படுத்திஇ இழுக்கின்ற பக்கமெல்லாம்

திரும்பும் சாட்டை நான். சுயமாக செயல்பட இயலாத எடுப்பார் கைப்பிள்ளை நான். நானே உயிரற்றவன் ஆனால் உங்களில் எத்தனைபேர் என்னைப் போல சுயம் அறியாத எடுப்பார் கைப்பிள்ளைகளாய் வாழ்கிறீர்கள்?

இயேசு பேசுகிறார்:

சாட்டைகளின் அடி என்னை தள்ளியதை விட வார்த்தையெனும் சாட்டையால் ஒருவர் மற்றவரின் மனச்சுவர்களை நொறுக்கும்போது நான் கீழேவிழுகிறேன். வசைமொழிகளால் பலரை நம்பிக்கை இழக்க செய்யும் போது நான் கால்கள் தடுமாறி கீழே விழுகிறேன். இனியாவது உங்கள் வார்த்தைகள் முட்டித் தள்ளாது தாங்கி தோள் கொடுப்பதாகவும் இடிந்து தகர்ப்பதாக அல்லாது கட்டி எழுப்புவதாகவும் அமையட்டும்.

நாம் பேசுவோம்:

வார்த்தைகளால் பலருக்கு நல்வாழ்வு வழங்கிய இறைவா! நாங்களும் உம்மை பின்பற்றி வாழ்வு தரும் வார்த்தைகளால் பிறரை வாழச் செய்யவும்இ தீமைகளை நன்மையால் வென்றிடவும்இ தேவையான உமது அருட்கொடைகளை எங்களுக்குத் தந்தருளும்.

## எட்டாம் நிலை: இயேசுவின் முன் எருசலேம் மகளிர் கண்ணீரோடு

**கண்ணீர் பேசுகிறது:**

இந்த கண்ணீர் கணவாயினின்று எங்களை காத்தருளும் என அனைவரும் வேண்டுகின்றனர். உலகத்தில் உள்ள அனைத்து தண்ணீரையும் விட எனக்கு மதிப்பு அதிகம். மனிதர்கள் மகிழ்ச்சியாய் இருக்கும் போது அவர்கள் கண்களில் இருந்து நான் வந்தேன் என்றால் என்னை ஆனந்த கண்ணீர் என்றும் துயரப்படும் போது மனிதர்கள் கண்களில் இருந்து நான் வருகின்ற போது எனக்கு கவலையின் கண்ணீர் என்றும் பெயர் சூட்டுகின்றனர். பிறக்கும் போது பிறந்த குழந்தையின் கண்ணில் இருந்து ஆரம்பமாகிறது என் பயணம் இறுதியில் கல்லறை செல்லும் வரையில் மனிதர்கள் என்னை தங்கள் கண்ணிலிருந்து பல்வேறு வாழ்க்கை நிலையில் வரவைக்கின்றார்கள். எனக்கு உள்ள ஒற்றுமை என்னவென்றால் நான் துன்பப்படுகிறவர்களின் மற்றும் துன்ப படுகிறவர்களுக்கு துணைபோகின்றவாகள் அனைவரின் கண்களிலும் நான் தென்படுவேன். இன்று இயேசுவின் சிலுவைப் பாடுகளைப் பார்த்து எருசலேம் பெண்கள் கண்களில் நான் காணப்படுகின்றேன். பெண்கள் சொல்லமுடியா துயரைக் கண்டதால் என்னை அவர்களின் கண்ணிலிருந்து மழையெனக் கொட்டித் தீர்க்கின்றார்கள். துயரப்படுவோருக்கு தான்

புரியும் என் அருமை. என் வருகையை கண்ட இயேசு தனது வார்த்தைகளால் அப்பெண்களின் கண்ணீராகிய என்னை துடைக்கிறார்.

இயேசு பேசுகிறார்:
அன்று இறந்த லாசருக்காகவும் யெருசலேமின் அழிவினை நினைத்தும் நான் கண்ணீர் விட்டு அழுதேன். இன்று என் துன்பத்தைப் பார்த்து இத்தனை பெண்கள் அழுகின்றார்கள். என்றாவது நீங்கள் உங்கள் அன்புக்குரியோரின் துயர்கண்டு கலங்கி கண்ணீர் சிந்தியிருக்கிறீர்களா? அப்படி சிந்தியிருந்தால் நீங்கள் சிந்திய ஒரு துளி கண்ணீரும் வீண்போகாது.

நாம் பேசுவோம்:
அன்பு இயேசுவே! எங்கள் வாழ்வில் நாங்கள் அன்பு செய்கின்ற மனிதர்களின் துன்பதுயரங்களில் கண்ணீர் சிந்தவும் அவர்களது கண்ணீரை துடைக்கின்ற கரங்களாகவும் நாங்கள் வாழ உமதருள் தாரும்.

## ஒன்பதாம் நிலை: இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

**கல்வாரி மலை பேசுகிறது:**
நான் தான் கல்வாரி மலை பேசுகிறேன். வானத்துக் கதிரவனாய் பிறந்திருந்தால் உலகிற்கு ஒளிதந்து வாழ்ந்திருப்பேன். வற்றாத நதியாய் பிறந்திருந்தால் ஊரெங்கும் ஓடி வளம் சேர்த்து மகிழ்ந்திருப்பேன். இப்படி மலையாக நின்று தனிமைத்துயரில் தவிக்கும் வேளையில் என் மலையெங்கும் குருதி வழிய வழியெங்கும் அடித்து துவைக்கப்பட்ட கந்தைத் துணியாக அந்த மனிதருள் மாணிக்கத்தை என் மலைமீது வதைத்தார்கள். மூன்று முறை கால் இடறி அவர் விழுந்த நிலை கண்டு மலையாகிய நானே மனம் வெதும்பித் துயரில் தவிக்கும் வேளையில் என்மீது மலைபோல பலர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இயேசு பேசுகிறார்:
மலை மீது நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களுள் நீங்களும் ஒருவர் தானா?. சக மனிதர்கள் வதைபடும் போது தூரம் நின்று வேடிக்கைப் பார்த்து பாவம் என்று பரிதாப வார்த்தைகளை உதிர்த்துவிட்டு எதுவும் நடக்காதது போல் மலைத்து போய் நிற்கின்றீர்களா?. கண்முன்னே நிகழ்ந்ததைக் கண்டும் காணதவராய் மனிதாபிமானமே இல்லாதது போல் வாழ்ந்தது போதும். விழுந்து கிடக்கும் மனித மாண்பை தூக்கி நிறுத்த மலையாய் ஒதுங்கி நிற்காது மனிதனாய் முன்வாருங்கள்.

நாம் பேசுவோம்:

அன்பு இயேசுவே! பிறரது துன்பத்திலும் தடுமாற்றங்களிலும் மலையாய் மலைத்து நிற்காமல் மனிதனாய் மனமுவந்து கைகொடுத்து தூக்கி விட தேவையான நல்லெண்ணத்தை தந்தருளும் இறைவா!

## பத்தாம் நிலை: இயேசு ஆடையின்றி அலங்கோலமாக்கப்படுகிறார்

**வெட்கம் பேசுகிறது:**

நான் தான் நீங்கள் தினம் தினம் எதிர்கொள்ளும் வெட்கம் பேசுகிறேன். இதோ இங்கே ஒரு மனிதர் இயேசு. பகையாளிகள் அவர் ஆடைகளை உரிந்தெடுத்து அவரை ஆடையற்றவராக விட்டுவிட்டனர். வெட்கத்தை மட்டுமே ஆடையாக அணிந்தவராய் இந்த மனிதன். வெட்கமாகிய எனக்கே வெட்கமாய் இருக்கிறது. வெட்கம் என்ற சொல்லை அதிகமாக கொச்சைப் படுத்தியே பழகிவிட்டீர்கள். நீங்கள் ஆடை, உடல,; கற்பு இவற்றோடு மட்டும் வெட்கமாகிய என்னை முடக்கிவிட்டீர்கள். இதோடு மட்டும்தானா நான்? இல்லை எவ்வளவோ பொருள் என்னுள் அடங்கியுள்ளது. ஊழல் செய்தவர் என்றும் வெட்கப்படுவதில்லையே! இன்றைய சூழலில் சாதிச் சாக்கடையில் ஊறி இருக்கும் சாதி இனப்பித்து பிடித்தவர்கள் வெட்கப்படுவதில்லையே! சக மனிதர்களின் வீழ்ச்சியில் தம் வாழ்வை வளர்த்துக் கொள்ளும் பெருமுதலைகள் வெட்கப்படுவதில்லையே! பொறாமை கோபம் ஆசை தன்னலம் என்ற பாவ எண்ணங்களோடு வாழ்பவர்கள் வெட்கப்படுவதில்லையே! என்னை ஆடையோடும் உடலோடும் பெண்ணோடும் மட்டும் குறுகிய வட்டத்தில் அடைத்து விடாமல் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் என்னைப் பொருத்தி பொருள் கொள்ளுங்கள்.

இயேசு பேசுகிறார்:

அன்பர்களே! வெட்கத்தை மட்டுமே என் ஆடையாக அணிந்து ஆடையற்றவனாக நிற்கின்றேன். எதற்காக? அடைய வேண்டிய இலட்சியத்திற்காக. உங்களுக்கு கிடைக்க வேண்டிய மீட்புக்காக. நீங்கள் உங்கள் நெறிமாறிய செயல்களுக்காக வெட்கப்பட்டு, என்னைப் போல பிறர் வாழ எத்துன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் மனம் பெற்றால் நீங்களும் மறுகிறிஸ்துவாகலாம்.

நாம் பேசுவோம்:

இறைவா! எங்கள் தீயசெயல்களுக்காக நாங்கள் வெட்கப்படுகிறோம். எங்கள் பாவங்களுக்காக வெட்கி தலைகுனிகிறோம். பிறர் வாழ எங்களையே பரிசாக்கும் மனநிலையை பெற்றிட உம் அருள் தாரும்.

## பதினொறாம் நிலை: இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

**ஆணிகள் பேசுகின்றன:**

மாசற்ற இயேசுவின் தசையைத் தின்று குருதியைப் பருகும் முதல் வாய்ப்பினைப் பெற்ற கூர்மையான ஆணி பேசுகிறேன். உழைக்கவும் ஆழமான பிணைப்புகளை உருவாக்கவும் தானே நாங்கள் ஆணிகளாகப் படைக்கப்பட்டோம். கருணையே உருவான இயேசுவின் கைகளையும் கால்களையும் துளைப்பதற்கு எங்களைப் பயன்படுத்தி விட்டார்களே இந்தக் கொடிய மனிதர்கள். பார்வையற்றோரையும் நோயால் பீடிக்கப்பட்டோரையும் தொட்டு மறுவாழ்வு தந்த உன்னத கரங்களை செயலிழக்கச் செய்ய எங்களை பயன்படுத்தி விட்டார்கள் இந்த சதிகாரர்கள். படைப்பு பொருளான நாங்களே எங்களை படைத்தவரை பதம் பார்த்து விட்டோமே.

இயேசு பேசுகிறார்:

மூன்று ஆணிகளால் என்னை அன்று சிலுவையில் அறைந்த கயவர்கள் போன்று இன்று இந்த சமூகத்திலே வன்முறை எனும் ஆணியை அமைதி மீதும,; பொய் என்கிற ஆணியை உண்மை மீதும், சந்தேகம் எனும் ஆணியை நம்பிக்கை மீதும், பொறாமை எனும் ஆணியை அன்பின் மீதும,; இரக்கமின்மை யெனும் ஆணியை மனித நேயத்த்தின் மீதும் அறைந்து மனிதத்தை செயலிழக்கச் செய்கின்ற கயவர்களிடமிருந்து உங்களைக் காத்துக் கொண்டு சமூகத்தின் மீது அடிக்கப்பட்ட ஆணிகளை பிடுங்கி எறியுங்கள் அப்போது எனது ஆணிகளும் களையப்படும்.

நாம் பேசுவோம்:

அன்பு இறைவா! சமூகத்தின் மீது அறையப்பட்டுள்ள ஆணிகளை களைந்து ஆணி கொண்டு அறையும் மூர்க்க குணத்தை எங்களிடமிருந்து அகற்றிட உம் வல்லமை தாரும் இறைவா.

## பனிரெண்டாம் நிலை: இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

**காற்று பேசுகிறது:**

உலகமெல்லாம் நிறைந்து வாழும் உயிர்கெல்லாம் வாழ்வு தரும் காற்று பேசுகிறேன். மனிதரை மீட்க மனுவுருவெடுத்து மாசு மறுவற்ற இறைவனின் செம்மறி இறுதியில் தன் இன்னுயிர் துறந்து என்னில் இரண்டறக் கலந்தார். பாய்ந்த இடமெல்லாம் பசுமையை அள்ளித் தெளிக்கும் நதிபோல, பேய்ந்த இடமெல்லாம் குளிர்வித்து உயிர் வாழச் செய்யும் மழை போல, சென்ற இடமெல்லாம் வார்த்தைகளால், செவிவழி சிகிச்சைகள் செய்து, ஆன்மாக்களின் ஆறாத

இரணங்களை ஆற்றியவர் அவர். பாவத்தில் மூழ்கி திக்குத் தெரியாது தவித்த மாந்தருக்கு இரக்கமும், மன்னிப்பும், வழங்கி வாழ வழிகாட்டிய வள்ளல் அவர். இன்று மேலாடையில்லாமல் இன்னுயிர் நீத்து உயிரற்ற உடலாய் கழுமரத்தில். எனக்கு மட்டும் ஏன் இந்த சோதனை துன்பமும், துயரமும் என்று வெதும்பி வேதனைப்படும் மனிதருக்கெல்லாம் துன்பமும், துயரமும், வேதனையும், சோதனையும் மனித வாழ்வில் பிரிக்க முடியாத அங்கம் என்று மௌனமாய் பதில் சொல்லும் மனிதருள் மாணிக்கம்.

மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துண்பங்களைத் தன்மேல் சுமந்து கொண்டார். அவரே நம் குற்றங்களுக்காக காயமடைந்தார். நமக்கு நிறைவாழ்வு அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவர்தம் காயங்களால் நாம் குணமடைகிறோம்.

இயேசு பேசுகிறார்:
பாடல்

நாம் பேசுவோம்:
எங்களுக்காய் சிலுவையில் கொலையுண்ட இயேசுவே! உமது இறப்பை நினைந்து அழுது புலம்பி அமைதியாகச் சென்றுவிடாமல், எங்களுடைய முரண்பட்ட வாழ்வை மாற்றி எங்கள் வாழ்க்கைப் பாதையை சீரமைத்துக் கொள்ளும் உள்ளத்துணிவை எங்களுக்குத் தாரும்.

## பதிமூன்றாம் நிலை: இயேசுவின் உடல் அன்னையின் மடியில் கிடத்தப்படுகிறது

**அன்பு சீடர் பேசுகிறார்:**
இயேசுவின் தோள்களில் சாய்ந்திடும் பாக்கியம் பெற்றதால் என்னை எல்லோரும் இயேசுவின் அன்புச் சீடன் என்று அழைத்தார்கள். அவரோடு இராவுணவில் அப்பம் பகிர்ந்துண்டு, அவர்தம் கிண்ணத்தில் பருகி அவரோடு ஒட்டி உறவாடிய எனக்கு, அவருடைய துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள வழி தெரியவில்லை. தூரம் நின்று அவர் பட்ட பாடுகளைப் பார்த்து பதறி, அவரடைந்த துயரம் கண்டு துடிதுடித்து கல்வாரி வரை பின் தொடர்ந்து வந்தவன் நான். கடைசி துளி உயிருள்ள வரையிலும் தந்தையே இவர்கள் தாங்கள் செய்வதை அறியாது செய்கிறார்கள் இவர்களை மன்னியும் என்று சொல்லி மனதார மன்னித்த என் தலைவன் உயிரற்ற

உடலாய் அன்னையின் மடியில் இன்று உறங்குகிறார். சகோதரமே யாருக்காக இந்த தியாகச் செம்மலின் வாழ்வு சிலுவையில்? நமக்காகவே......

### அன்னை மரியாள் பேசுகிறார்:

உங்களுக்காக எனக்கென வைத்திருந்த ஒரே மகனையும் பலியாக கொடுத்து விட்டேன். உலகம் நல்வாழ்வு பெற வேண்டி தன்னை கையளித்த என் மகனின் கனவுகள் தொடர்ந்து நனவாக அவரது ஆட்சிக்காய் உழைக்க நீங்கள் முன் வருவீர்களா? பாவச்சூழலில் மூழ்கியிருக்கின்ற அறியாமையெனும் அறையிலிருந்து வெளியேறி என் அன்பு மகனின் அன்புச் சீடராய் வாழ முன்வாருங்கள்.

### நாம் பேசுவோம்:

அன்னைமரியே! இயேசுவின் இறையாட்சி கனவு நனவாக எங்களால் இயன்ற மட்டும் முழுமனதோடு உண்மைக்காய் எங்களை அர்ப்பணிக்க எங்களுக்காய் உம் திருமைந்தனிடம் மன்றாடும்.

## பதினான்காம் நிலை: இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

### கல்லறை பேசுகிறது:

சமரசம் உலாவும் இடம் நான். ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா என்ற பாடல் வரிகளுக்கேற்ப அரசன் முதல் ஆண்டி வரை எல்லோருடைய ஆட்டமும் அடங்குமிடம் கல்லறையாகிய என்னில் தான்.

கயமையே உருமாய் வாழ்க்கையைக் குலைப்பதே வேலையாய் கொண்டுள்ளோh,; இன்று கல்லறையில் வைக்கபட வேண்டியோர், உல்லாசமாய் உலகத்தை உலா வருகையில், பேசிய வார்த்தைகளாலும் ஆற்றிய செயல்களாலும் சென்ற இடமெல்லாம் நன்மையே செய்து வாழ்வை நிறைவாக வழங்கியவர் இங்கு கல்லறையாகிய என்னில் வைக்கப்படுகிறார். அவருடைய கொட்டத்தை அடக்கிவிட்டோம், ஆட்டத்தை முடக்கி விட்டோம் என்ற மமதையோடு சென்றவர்களுக்குத் தெரியவில்லை ஒரு விடியலை அவர்கள் கல்கொண்டு அடைத்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்பதை.

மனிதர்களே! கருவறைக்கும் கல்லறைக்கும் இடையே தோற்றம் மறைவு என்ற இரு மலைகளுக்கிடையே வாழ்க்கை என்கிற கயிறு கட்டி பயணம் செய்கிறீர்கள்.

நிறைவான பாதைகளில் இனிதாக பயணம் செய்யுங்கள் அதுவே உங்களுக்கு பெருமை.

## இயேசு பேசுகிறார்:

வாழ்க்கையை நிறைவாக வாழ என் வாழ்வின் வழி கற்றுதந்துள்ளேன். உங்கள் பாவச்சுமைகளையும் தீய எண்ணங்களையும் கல்லறைகளில் புதைத்து புது மனிதர்களாய் என் அன்பின் சாட்சிகளாய் வாழ்ந்திடுங்கள்.

## நாம் பேசுவோம்:

நிறைவான வாழ்வை கற்றுத் தந்த உத்தமரே! அன்பு சீடர்களாய் நாங்கள் வாழ தடையாய் இருக்கின்ற பதவி, புகழ், பேராசை போன்ற தீய எண்ணங்களை கல்லறைக்குள் அடக்கி புத்தம் புது படைப்பாய் அவனியில் உயிர்த்திட உம் அருள் தாரும்.